**<u>சுருக்கம்</u>**

மாநில பகிர்வு நிதி – பேரூராட்சிகள் நிர்வாகம் – மாநில நிதிக்குழு – அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதிப் பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை 2009–2010 – அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்திட ரூ.12,09,14,000/– விடுவித்து ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ2) துறை</u>**

**அரசாணை (ப) எண். 127** **நாள்: 26.03.2010**

**12, பங்குனி, திருவள்ளுவர் ஆண்டு 2041**

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண். 94, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.2) துறை, நாள் 06.7.2007.
2. பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண். 19332/09/ஈ1, நாள் 05.12.2009 மற்றும் 24.12.2009.

*****

**ஆணை:**

அனைத்து பேரூராட்சிகள் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், பேரூராட்சிகளில் 2007–2008ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் 2–வது கட்டமாக 2008–2009ஆம் ஆண்டு 140 பேரூராட்சிகளுக்கு பேரூராட்சி 1–க்கு ரூ.50.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.70.00 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கான மான்யம் ஒதுக்கீடு பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் கீழ்க்குறித்தவாறு வழிவகை செய்து தொகை விடுவித்து ஆணையிடப்பட்டது:-

| | | |
|---|---|---|
| 1) | அரசு மான்யம் | ரூ.25.00 கோடி |
| 2) | மாநில பகிர்வு நிதி | ரூ.24.00 கோடி |
| | **மொத்தம்** | **ரூ.49.00 கோடி** |

2. 140 பேரூராட்சிகளில், இத்திட்டத்தை செயல்படுத்த மொத்த மான்யத் தொகை ரூ.70.00 கோடியில், அரசு மான்யம் மற்றும் மாநில பகிர்வு நிதியுடன் சேர்த்து ரூ.49.00 கோடி போக, மீதமுள்ள ரூ.21.00 கோடி தொகையை, பேரூராட்சி 1–க்கு ரூ.15.00 இலட்சம் வீதம் மாநில பகிர்வு நிதி மற்றும் 12–வது நிதிக் குழு மான்யத் தொகையிலிருந்து செலவிடவும், மேற்காண் தொகை திரட்ட இயலாத பேரூராட்சிகளுக்கு அடிப்படைக் கட்டமைப்பு வசதிக்கான நிதிப் பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை (Infrastructure Gap Filling Fund under SFC Grants)–யிலிருந்து ஒதுக்கீடு செய்யவும் பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது.

3. 2009–2010ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் பேரூராட்சிகளுக்கு அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதி பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்பு தொகை தலைப்பின் கீழ் ரூ.13,01,16,000/– ஒதுக்கீடு செய்யப்பட்டது.

2009–2010ஆம் ஆண்டு அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதி பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்பு தொகை தலைப்பின் கீழ் ரூ.13,01,16,000/– ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதில் பேரூராட்சிகளில் கீழ்க்கண்ட விவரப்படி பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது என பேரூராட்சிகளின் இயக்குநர் தெரிவித்துள்ளார்:-

1) <u>அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்</u>

2009–2010ஆம் ஆண்டு 140 பேரூராட்சிகளில் அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் செயல்படுத்த நிர்ணயிக்கப்பட்ட மொத்த மான்யம் தொகை ரூ.70.00 கோடியில் அரசு மான்யம் மற்றும் மாநில பகிர்வு நிதியுடன் சேர்த்து ரூ.49.00 கோடி போக மீதமுள்ள ரூ.21.00 கோடி தொகையை பேரூராட்சி 1–க்கு ரூ.15.00 இலட்சம் வீதம் மாநில பகிர்வு நிதி அல்லது 12வது நிதி குழு மான்யம் தொகையிலிருந்து செலவிடவும், மேற்காண் தொகையை திரட்ட இயலாத பேரூராட்சிகளுக்கு அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதி பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை (Infrastructure Gap Filling Fund under SFC Grants)–லிருந்து ஒதுக்கீடு செய்யவும் பார்வை 2–ல் படிக்கப்பட்ட அரசாணை பத்தி எண்.4(இ)ல் ஆணையிடப்பட்டுள்ளது என்றும் அதன்படி, 2009–2010ம் ஆண்டு அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் செயல்படுத்திட ஜுலை, 2009 மாதம் முதல் டிசம்பர், 2009 மாதம் வரையிலான 6 மாதங்களுக்கு வழங்கப்படும் மாநிலப் பகிர்வு நிதியில் இருந்து பிடித்தம் செய்யப்பட வேண்டிய சாலை கடன்கள் மற்றும் ஓய்வூதிய பங்குத் தொகை போக மீதம் உள்ள தொகை ரூ.15.00 லட்சத்திற்கு குறைவாக உள்ள 63 பேரூராட்சிகளுக்கு தேவையான நிதியை அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதி பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை நிதியில் இருந்து ரூ.2,70,51,860/– (ரூபாய் இரண்டு கோடியே எழுபது லட்சத்து ஐம்பத்து ஒரு ஆயிரத்து எண்ணூற்று அறுபது மட்டும்)–ஐ 2009–2010ஆம் ஆண்டு அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் செயல்படுத்தப்படும் 140 பேரூராட்சிகளில் நிதி திரட்ட இயலாத இணைப்பு–1ல் கண்ட 63 பேரூராட்சிகளுக்கு விடுவிக்க பேரூராட்சிகளின் இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார். மேற்காண் நிதி திரட்ட இயலாத 63 பேரூராட்சிகளில், 83 பணிகள், ரூ.375.75 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும், அரசு மான்யம் போக பற்றாக்குறை தொகையை 2009–2010ஆம் ஆண்டு அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதி பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை நிதியில் இருந்து ரூ.2,70,51,860/– விடுவிக்குமாறு கோரியுள்ளார்.

2<u>) பேரூராட்சி அலுவலகக் கட்டிடம் கட்டுதல்</u>

பெரும்பாலான பேரூராட்சிகளில் அலுவலகக் கட்டிடம் போதுமான இடவசதி இல்லாமலும், தற்போதுள்ள அலுவலகக் கட்டிடங்கள் பழைமை வாய்ந்து பழுதடைந்து உபயோகப்படுத்த இயலாத நிலையிலும் உள்ளன. நிதி ஆதாரம் திரட்ட இயலாத நிதி பற்றாக்குறை உள்ள 22 பேரூராட்சிகளுக்கு புதிய அலுவலக கட்டிடமும் 1 பேரூராட்சிக்கு முதல் தளத்தில் கூட்ட அறையும் கட்டப்பட வேண்டியது அவசியமாக உள்ளது. பேரூராட்சிகளுக்கு இணைப்பு–2ல் கண்டபடி 23 பேரூராட்சிகளில் புதிய அலுவலகக் கட்டிடம் கட்டுவதற்கு மதிப்பீடுபடி ரூ. 491.50 இலட்சம் தேவைப்படுகிறது. எனவே, 2009–2010ஆம் ஆண்டு அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதி பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகையிலிருந்து ரூ.432.00 இலட்சம் நிதி விடுவிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது. மான்யம் போக, மதிப்பீட்டின் படி தேவைப்படும் கூடுதல் நிதி, அந்தந்த பேரூராட்சிகளின் பொது நிதியிலிருந்து ஈடுசெய்யப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3) <u>குடிநீர் அபிவிருத்தி திட்டம்</u>

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் இராமநாதபுரம் கூட்டு குடிநீர் திட்டமானது காவேரி ஆற்றிலிருந்து இராமநாதபுரத்திற்கு குடிநீர் கொண்டு செல்லும் திட்டமாகும். இத்திட்டத்தின் மூலம் திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை மாவட்டங்களிலுள்ள ஊராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகள் பயனடைகின்றன. இத்திட்டத்தின் மூலம் குடிநீர் ஆதாரம் மிக குறைந்த அளவிலுள்ள ராமநாதபுரம், சிவகங்கை மற்றும் புதுக்கோட்டை ஆகிய

மாவட்டங்களிலுள்ள சாயல்குடி, இளையான்குடி மற்றும் பொன்னமராவதி பேரூராட்சிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மூலம் நீரேற்றம் செய்ய ரூ.174.00 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. சமீபத்தில் பெய்த மிகக்கடுமையான மழையினால் நீலகிரி மாவட்டத்திலுள்ள பேரூராட்சிப்பகுதிகள் மண்சரிவினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. இம்மாவட்டத்திலுள்ள கேத்தி பேரூராட்சி பகுதியில் குடிநீர் விநியோகம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, இப்பேரூராட்சியில் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி ரூ.5.00 லட்சம் மதிப்பீட்டில் கட்டி அப்பகுதி பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட வேண்டியுள்ளது. எனவே, மேற்கண்ட பேரூராட்சிகளுக்கு குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகள் மேற்கொள்ள இணைப்பு–3–ல் கண்டுள்ளபடி, ரூ.179.00 இலட்சம் 2009–2010ஆம் ஆண்டு அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதி பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகையிலிருந்து விடுவிக்க பேரூராட்சிகளின் இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**4) சாலைகள், வடிகால், சாலையோரப் பூங்கா மற்றும் நடைபாதை அமைத்தல்**

உலகத் தமிழ் செம்மொழி மாநாடு கோவை மாவட்டத்தில் ஜூன் 2010–ல் நடைபெற உள்ளது. இம்மாநாடு நடைபெறும் இடத்திற்கு அருகாமையில் காளப்பட்டி பேரூராட்சி உள்ளது. இப்பேரூராட்சி பகுதியில் சாலையின் இருபுறமும் நடைபாதை மற்றும் நீரூற்றுடன் கூடிய சாலையோர பூங்கா அமைக்கப்பட வேண்டியது அவசியமாக உள்ளது. சமீபத்தில் பெய்த பருவமழை காரணமாக பாதிக்கப்பட்ட நீலகிரி மாவட்டம் மற்றும் இதர மாவட்டங்களில் சாலைப்பணிகள், வடிகால்பணிகள் மேம்படுத்துவது அவசியமாகிறது. நிதி ஆதாரம் திரட்ட இயலாத நிதி பற்றாக்குறை உள்ள பேரூராட்சிகளின் முக்கியமான சாலைகளை தார்சாலை, சிமெண்ட் சாலை, வடிகால், சாலையோர பூங்கா மற்றும் நடைபாதை ஆகியவற்றை அமைத்து அபிவிருத்தி செய்ய முழு மானியம் கோரி அநேக விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. எனவே, இணைப்பு–4ல் கண்ட பேரூராட்சிகளில் சாலைகள், வடிகால், சாலையோரப் பூங்கா மற்றும் நடைபாதை அமைத்தல் போன்ற 50 பணிகளை மேற்கொள்ள 2009–2010ஆம் ஆண்டு அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதி பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகையிலிருந்து ரூ.419.64 இலட்சம் விடுவிக்க பேரூராட்சிகளின் இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

### தொகுப்பு

(ரூ லட்சத்தில்)

| வ. எண். | பணிகள் விவரம் | எண்ணிக்கை | மதிப்பீடு தொகை | ஒதுக்கீடு செய்ய வேண்டிய தொகை |
|---|---|---|---|---|
| 1 | 2009–2010ஆம் ஆண்டு அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ள 63 பேரூராட்சிகளுக்கு வழங்க வேண்டியது. | 83 | 375.75 | 270.52 |
| 2 | பேரூராட்சி அலுவலக கட்டிடங்கள் கட்டுதல் | 23 | 491.50 | 432.00 |
| 3 | குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகள் | 4 | 179.00 | 179.00 |
| 4 | சாலைகள், வடிகால், தடுப்புச் சுவர், சாலையோரப் பூங்கா மற்றும் நடைபாதை அமைத்தல் | 50 | 420.55 | 419.64 |
| | **மொத்தம்** | **160** | **1466.80** | **1301.16** |

மேற்படி பணிகளை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு ஏதும் இல்லாததால், 2009–2010ஆம் ஆண்டிற்கான அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதி பற்றாக்குறை ஈடு செய்வதற்கான பங்களிப்பு தொகை ரூ. 13,01,16,000/– (ரூபாய் பதின்மூன்று கோடியே ஒரு லட்சத்து பதினாறாயிரம் மட்டும்)ஐ நிதி பற்றாக்குறை உள்ள பேரூராட்சிகளுக்கு விடுவிக்க பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அனுமதி வழங்கக்கோரி அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

4. அடிப்படை கட்டமைப்பு மற்றும் இயக்கம் மற்றும் பராமரிப்பு நிதிப்பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகையை செலவிடுவதற்கான கருத்துருக்களை ஆய்வு செய்வதற்காக அமைக்கப்பட்ட குழு, அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதிப்பற்றாக்குறை ஈடு செய்வதற்கான பங்களிப்பு நிதி ரூ.13,01,16,000/– (ரூபாய் பதின்மூன்று கோடியே ஒரு லட்சத்து பதினாறாயிரம் மட்டும்) நிதிப்பற்றாக்குறை உள்ள பேரூராட்சிகளை தேர்வு செய்து மேற்படி தொகையினை விடுவிக்கவும் பேரூராட்சிகள் இயக்குநருக்கு அனுமதி வழங்கவும் ஒப்புதலளித்துள்ளது.

5. வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் பேரூராட்சிகளுக்கு அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதிப்பற்றாக்குறை ஈடு செய்வதற்கான பங்களிப்பு நிதிதலைப்பின் கீழ் ரூ.13,01,16,000/– ஒதுக்கீடு செய்யப்பட்டது.

6. பார்வை மூன்றில் படிக்கப்பட்ட 05.12.2009 மற்றும் 24.12.2009–ம் நாளிட்ட பேரூராட்சிகளின் இயக்குநரின் கருத்துருவின்படி 2009–2010ஆம் ஆண்டு திட்ட மதிப்பீட்டில் அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதிப்பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்பு தொகை தலைப்பில் ஒதுக்கப்பட்ட ரூ.13,01,16,000/– (ரூபாய் பதின்மூன்று கோடியே ஒரு லட்சத்து பதினாறாயிரம் மட்டும்) பேரூராட்சிகளில் அத்தியாவசிய பணிகளை மேற்கொள்ள ஏதுவாக கீழ்க்கண்ட தொகுப்பு மற்றும் இணைப்பில் தெரிவித்துள்ளவாறு ரூ.13,01,16,000/– (ரூபாய் பதின்மூன்று கோடியே ஒரு லட்சத்து பதினாறாயிரம் மட்டும்)ஐ விடுவிக்கவும் பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அனுமதி வழங்கவும் அக்குழு ஒப்புதலளித்துள்ளது:-

(ரூ லட்சத்தில்)

| வ. எண். | பணிகள் விவரம் | எண்ணிக்கை | மதிப்பீடு தொகை | ஒதுக்கீடு செய்ய வேண்டிய தொகை |
|---|---|---|---|---|
| 1 | 2009–2010ம் ஆண்டு அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ள 63 பேரூராட்சிகளுக்கு வழங்க வேண்டியது. | 83 | 375.75 | 270.52 |
| 2 | பேரூராட்சி அலுவலக கட்டிடங்கள் கட்டுதல் | 23 | 491.50 | 432.00 |
| 3 | குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகள் | 4 | 179.00 | 179.00 |
| 4 | சாலைகள், வடிகால், தடுப்புச் சுவர் சாலையோரப் பூங்கா மற்றும் நடைபாதை அமைத்தல் | 28 | 423.00 | 419.64 |
| | **மொத்தம்** | **138** | **1469.25** | **1301.16** |

7. இந்நிலையில், மாநில வரி வருவாயை கருத்திற்கொண்டு 2009–2010ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீட்டில் அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதி பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை ரூ.12,09,14,000/– ஆக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

8. எனவே, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 27.03.2008–ம் நாளிட்ட அரசாணை (நிலை) எண்.52–ன்படி அமைக்கப்பட்ட குழுவின் ஒப்புதலின் அடிப்படையில் பேரூராட்சிகளின் இயக்குநரின் கருத்துருவை அரசு ஏற்று 2009–2010ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட திருத்திய மதிப்பீட்டில், அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதிப்பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கான பங்களிப்புத் தொகை தலைப்பில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ.12,09,14,000/– (ரூபாய் பன்னிரெண்டு கோடியே ஒன்பது இலட்சத்து பதினான்காயிரம் மட்டும்)ஐ பேரூராட்சிகளில்

அத்தியாவசிய பணிகளை மேற்கொள்ள ஏதுவாக இணைப்பு 1, 2, 3 மற்றும் 4–ல் குறிப்பிட்டுள்ளவாறு விடுவிக்க பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அனுமதி மற்றும் அதிகாரம் அளித்து அரசு ஆணையிடுகிறது.

9. மேலே பத்தி 8–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையை ரொக்கமாக விடுவிக்காமல் தன்வைப்புக் கணக்குத் தலைப்பின் (P.D.Account) கீழ் பற்று வைக்க ஏதுவாக உரிய கணக்கு எண்ணிட்டு தமிழ்நாடு நகர்ப்புர அடிப்படை கட்டமைப்பு வசதி மேம்பாடு மற்றும் புதுப்பிப்பு நிதி என்ற பெயருக்கு காசோலை / வரைவோலையாகவோ பெற்று வழங்கும்படி பேரூராட்சிகளின் இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. மேலும், இச்செலவினம் கீழ்க்கண்ட கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

3604 உள்ளாட்சி மன்றங்களுக்கும் ஊராட்சி நிறுவனங்களுக்கும் இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் – 193 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், அறிவிக்கப்பட்ட பகுதி குழுக்கள் அல்லது அதற்கு சமமான அமைப்புகளுக்கு உதவி – I திட்டத்தில் சேராதது AC அடிப்படைக் கட்டமைப்பு வசதிக்கான நிதி பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை 09 உதவித் தொகை 02 மூலதன செலவுக்கான உதவித் தொகை (த.தொ.கு. எண். 3604 00 193 AC 0923)

11. அடிப்படைக் கட்டமைப்பு, இயக்கம் மற்றும் பராமரிப்புப்பணி ஒப்பளிப்புக்குழு பரிந்துரைத்துள்ள பணிகளுக்குத் தேவையான தொகையை விட குறைவான தொகை ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளதால் அதன் விவரத்தை அக்குழுவின் கவனத்திற்கு தவறாமல் கொண்டு செல்லும்படி பேரூராட்சிகளின் இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

12. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண். 11992/MAWS/10 நாள் 26.3.2010–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**நிரஞ்சன்மார்டி**
**அரசு செயலாளர்.**

**<u>பெறுநர்:-</u>**

பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை – 108.(இ).
சம்பளக் கணக்கு அலுவலர், (வடக்கு) சென்னை – 1. (இ).
மாநில கணக்காயர், சென்னை – 18. (இ).

**<u>நகல்:–</u>**

இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, குறளகம், சென்னை 108. (இ).
ந.நி.(ம)கு.வ.(அந.2) துறை, சென்னை –9.(இ).
நிதி (ந.நி.(ம)கு.வ. / நிதிக்குழு.4) துறை, சென்னை –9.(இ).
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள். (இ).
உதிரி/நகல்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது./

பிரிவு அலுவலர்.

**அரசாணை (ப) எண். 127, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 26. 3. 2010**

**இணைப்பு–1**

**அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் 2009–10 கீழ் அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதி பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கான தொகையிலிருந்து வழங்கப்பட வேண்டியது**

| வ. எண் | பேரூராட்சியின் பெயர் | மொத்த ஒதுக்கீட்டு தொகை ரூ | மாநில பகிர்வு நிதியில் வழங்கியது ரூ | வழங்கப்பட வேண்டிய தொகை ரூ |
|---|---|---|---|---|
| | **காஞ்சிபுரம்** | | | |
| 1 | நந்தம்பாக்கம் | 1500000 | 1362050 | 137950 |
| 2 | திருப்போரூர் | 1500000 | 1400432 | 99568 |
| | **மொத்தம்** | **3000000** | **2762482** | **237518** |
| | **திருவள்ளூர்** | | | |
| 3 | பள்ளிப்பட்டு | 1500000 | 1216934 | 283066 |
| | **மொத்தம்** | **1500000** | **1216934** | **283066** |
| | **வேலூர்** | | | |
| 4 | கலவை | 1500000 | 1293004 | 206996 |
| | **மொத்தம்** | **1500000** | **1293004** | **206996** |
| | **திருவண்ணாமலை** | | | |
| 5 | தேசூர் | 1500000 | 945827 | 554173 |
| | **மொத்தம்** | **1500000** | **945827** | **554173** |
| | **தருமபுரி** | | | |
| 6 | மாரண்டஉறள்ளி | 1500000 | 168416 | 1331584 |
| 7 | பெண்ணாகரம் | 1500000 | 1212993 | 287007 |
| | **மொத்தம்** | **3000000** | **1381409** | **1618591** |
| | **சேலம்** | | | |
| 8 | அயோத்தியாபட்டணம் | 1500000 | 1125960 | 374040 |
| 9 | ஜலகண்டாபுரம் | 1500000 | 1094408 | 405592 |
| 10 | கொங்கணாபுரம் | 1500000 | 1327318 | 172682 |
| 11 | இளம்பிள்ளை | 1500000 | 1082502 | 417498 |
| 12 | நங்கவள்ளி | 1500000 | 1150529 | 349471 |
| | **மொத்தம்** | **7500000** | **5780717** | **1719283** |
| | **நாமக்கல்** | | | |
| 13 | பாண்டமங்கலம் | 1500000 | 487816 | 1012184 |
| 14 | பரமத்தி | 1500000 | 1062804 | 437196 |
| 15 | எருமைப்பட்டி | 1500000 | 1418792 | 81208 |
| 16 | பிள்ளாநல்லூர் | 1500000 | 947274 | 552726 |
| | **மொத்தம்** | **6000000** | **3916686** | **2083314** |
| | **ஈரோடு** | | | |
| 17 | ஆப்பக்குடல் | 1500000 | 1454826 | 45174 |
| 18 | சென்னிமலை | 1500000 | 1399514 | 100486 |
| 19 | சித்தோடு | 1500000 | 742756 | 757244 |
| 20 | லக்கம்பட்டி | 1500000 | 968620 | 531380 |

| | | | | |
|---|---|---|---|---|
| 21 | சிவகிரி | 1500000 | 930322 | 569678 |
| 22 | அத்தானி | 1500000 | 1352364 | 147636 |
| 23 | சின்னசமுத்திரம் | 1500000 | 721692 | 778308 |
| 24 | நெருஞ்சிப்பேட்டை | 1500000 | 1091036 | 408964 |
| | **மொத்தம்** | **12000000** | **8661130** | **3338870** |
| | **கோயம்புத்தூர்** | | | |
| 25 | கிணத்துக்கடவு | 1500000 | 1219530 | 280470 |
| 26 | பெரிய நெகமம் | 1500000 | 1158762 | 341238 |
| 27 | இடிகரை | 1500000 | 1048237 | 451763 |
| 28 | மோப்பேரிபாளையம் | 1500000 | 1390035 | 109965 |
| | **மொத்தம்** | **6000000** | **4816564** | **1183436** |
| | **கடலூர்** | | | |
| 29 | மங்கலம்பேட்டை | 1500000 | 410542 | 1089458 |
| | **மொத்தம்** | **1500000** | **410542** | **1089458** |
| | **விழுப்புரம்** | | | |
| 30 | விக்கிரவாண்டி | 1500000 | 1317482 | 182518 |
| 31 | அரகண்டநல்லூர் | 1500000 | 369664 | 1130336 |
| | **மொத்தம்** | **3000000** | **1687146** | **1312854** |
| | **தஞ்சாவூர்** | | | |
| 32 | அய்யம்பேட்டை | 1500000 | 940210 | 559790 |
| 33 | பாபநாசம் | 1500000 | 1288284 | 211716 |
| 34 | திருக்காட்டுப்பள்ளி | 1500000 | 1097438 | 402562 |
| 35 | திருவையாறு | 1500000 | 610500 | 889500 |
| 36 | சுவாமிமலை | 1500000 | 576120 | 923880 |
| | **மொத்தம்** | **7500000** | **4512552** | **2987448** |
| | **நாகப்பட்டிணம்** | | | |
| 37 | வைத்தீஸ்வரன்கோயில் | 1500000 | 1067862 | 432138 |
| | **மொத்தம்** | **1500000** | **1067862** | **432138** |
| | **திருவாரூர்** | | | |
| 38 | குடவாசல் | 1500000 | 1449185 | 50815 |
| 39 | நீடாமங்கலம் | 1500000 | 853080 | 646920 |
| | **மொத்தம்** | **3000000** | **2302265** | **697735** |
| | **திருச்சிராப்பள்ளி** | | | |
| 40 | தொட்டியம் | 1500000 | 1033438 | 466562 |
| 41 | மேட்டுப்பாளையம் | 1500000 | 1150256 | 349744 |
| | **மொத்தம்** | **3000000** | **2183694** | **816306** |
| | **அரியலூர்** | | | |
| 42 | வரதராஜன்பேட்டை | 1500000 | 1253559 | 246441 |
| | **மொத்தம்** | **1500000** | **1253559** | **246441** |
| | **புதுக்கோட்டை** | | | |
| 43 | கீரமங்கலம் | 1500000 | 970492 | 529508 |
| | **மொத்தம்** | **1500000** | **970492** | **529508** |

| | | | | |
|---|---|---|---|---|
| | **திண்டுக்கல்** | | | |
| 44 | வேடசந்தூர் | 1500000 | 1223880 | 276120 |
| 45 | எரியோடு | 1500000 | 1284763 | 215237 |
| | **மொத்தம்** | **3000000** | **2508643** | **491357** |
| | **கரூர்** | | | |
| 46 | பள்ளப்பட்டி | 1500000 | 1427030 | 72970 |
| | **மொத்தம்** | **1500000** | **1427030** | **72970** |
| | **மதுரை** | | | |
| 47 | பேரையூர் | 1500000 | 449682 | 1050318 |
| | **மொத்தம்** | **1500000** | **449682** | **1050318** |
| | **தேனி** | | | |
| 48 | காமயகவுண்டன்பட்டி | 1500000 | 867274 | 632726 |
| 49 | புதுப்பட்டி | 1500000 | 1071154 | 428846 |
| | **மொத்தம்** | **3000000** | **1938428** | **1061572** |
| | **இராமநாதபுரம்** | | | |
| 50 | கமுதி | 1500000 | 1072168 | 427832 |
| | **மொத்தம்** | **1500000** | **1072168** | **427832** |
| | **சிவகங்கை** | | | |
| 51 | சிங்கம்புனரி | 1500000 | 1414746 | 85254 |
| 52 | பள்ளத்தூர் | 1500000 | 906526 | 593474 |
| | **மொத்தம்** | **3000000** | **2321272** | **678728** |
| | **திருநெல்வேலி** | | | |
| 53 | கோபாலசமுத்திரம் | 1500000 | 1135994 | 364006 |
| 54 | நாங்குனேரி | 1500000 | 658231 | 841769 |
| 55 | திருக்கறுங்குடி | 1500000 | 1285797 | 214203 |
| | **மொத்தம்** | **4500000** | **3080022** | **1419978** |
| | **தூத்துக்குடி** | | | |
| 56 | வி.புதுார் | 1500000 | 1315028 | 184972 |
| 57 | பெருங்குளம் | 1500000 | 1051093 | 448907 |
| | **மொத்தம்** | **3000000** | **2366121** | **633879** |
| | **கன்னியாகுமரி** | | | |
| 58 | புதுக்கடை | 1500000 | 886216 | 613784 |
| 59 | அழகப்பாபுரம் | 1500000 | 1138800 | 361200 |
| 60 | மயிலாடி | 1500000 | 1127816 | 372184 |
| 61 | இரணியல் | 1500000 | 1294179 | 205821 |
| 62 | தென்தாமரைக்குளம் | 1500000 | 1405201 | 94799 |
| 63 | தேரூர் | 1500000 | 1269697 | 230303 |
| | **மொத்தம்** | **9000000** | **7121909** | **1878091** |
| | **பெருமொத்தம்** | **94500000** | **67448140** | **27051860** |

## இணைப்பு–2

## 2009–2010ம் ஆண்டு அடிப்படை கட்டமைப்பு நிதி பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகையிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள்

### பேரூராட்சி அலுவலகக் கட்டிடம் கட்டுதல்

(ரூ.இலட்சத்தில்)

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | பேரூராட்சியின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒதுக்கீடு செய்ய வேண்டிய தொகை |
|---|---|---|---|---|
| 1 | வேலூர் | உதயேந்திரம் | 20.00 | 20.00 |
| 2 | தர்மபுரி | அரூர் | 20.00 | 10.00 |
| 3 | | பொ.மல்லாபுரம் | 20.00 | 20.00 |
| 4 | | பெண்ணகரம் | 20.00 | 20.00 |
| 5 | சேலம் | இளம்பிள்ளை | 24.50 | 20.00 |
| 6 | | தேவூர் | 25.00 | 20.00 |
| 7 | | கருப்பூர் | 25.00 | 20.00 |
| 8 | | காடையாம்பட்டி | 25.00 | 20.00 |
| 9 | ஈரோடு | நம்பியூர் | 20.00 | 15.00 |
| 10 | கோயம்புத்தூர் | நம்.4 வீரபாண்டி | 35.00 | 20.00 |
| 11 | நீலகிரி | நடுவட்டம் | 20.00 | 20.00 |
| 12 | கடலூர் | ஸ்ரீமுஷ்ணம் | 20.00 | 20.00 |
| 13 | | பரங்கிப்பேட்டை | 20.00 | 20.00 |
| 14 | விழுப்புரம் | கோட்டக்குப்பம் | 20.00 | 20.00 |
| 15 | | திருவெண்ணைநல்லூர் | 20.00 | 20.00 |
| 16 | அரியலூர் | உடையார்பாளையம் | 20.00 | 20.00 |
| 17 | கரூர் | பழையஜெயங்கொண்டசோழபுரம் | 20.00 | 20.00 |
| 18 | மதுரை | பேரையூர் | 20.00 | 20.00 |
| 19 | தேனி | மார்க்கயன்கோட்டை | 20.00 | 20.00 |
| 20 | திருநெல்வேலி | சுந்தரபாண்டியபுரம் | 20.00 | 20.00 |
| 21 | | முக்கூடல் | 20.00 | 20.00 |
| 22 | கன்னியாகுமரி | களியக்காவிளை | 30.00 | 20.00 |
| 23 | | நெய்யூர் (முதல் தளம்) | 7.00 | 7.00 |
| | | **மொத்தம்** | **491.50** | **432.00** |

## இணைப்பு–3

## 2009–2010ம் ஆண்டு அடிப்படை கட்டமைப்பு நிதி பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகையிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள்

## குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகள்

(ரூ. இலட்சம்)

| வ. எண் | மாவட்டம் | பேரூராட்சியின் பெயர் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | இராமநாதபுரம் | சாயல்குடி | இராமநாதபுரம் கூட்டு குடிநீர் திட்டத்தில் 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் அதைச்சார்ந்த பணிகள் | 12.00 | 12.00 |
| 2 | சிவகங்கை | இளையாங்குடி | இராமநாதபுரம் கூட்டு குடிநீர் திட்டத்தில் 4.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, (10 கி.மீ நீளத்தில் பிரதான குழாய், 20 கி.மீ நீளத்தில் பகிர்மான குழாய்கள் மற்றும் மேற்பார்வை கட்டணம், எதிர்பாரா செலவினம், நூற்றுவித கட்டணம் உட்பட) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் திட்டம் செயல்படுத்துதல் | 137.00 | 137.00 |
| 3 | புதுக்கோட்டை | பொன்னமராவதி | இராமநாதபுரம் கூட்டு குடிநீர் திட்டத்தில் 3.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் அதைச்சார்ந்த பணிகள் | 25.00 | 25.00 |
| 4 | நீலகிரி | கேத்தி | மந்தாடாவில் தரைமட்ட நீர்தேக்க தொட்டி கட்டுதல் | 5.00 | 5.00 |
| | | | | 179.00 | 179.00 |

**இணைப்பு–4**

**2009–2010ம் ஆண்டு அடிப்படை கட்டமைப்பு நிதி பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகையிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள்**

**சாலைகள், வடிகால், சாலையோரப் பூங்கா, நடைபாதை மற்றும் தடுப்புச்சுவர் அமைத்தல்**

(ரூ. இலட்சம்)

| வ. எண் | மாவட்டம் | பேரூராட்சியின் பெயர் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒதுக்கீடு செய்யப் பட வேண்டிய தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | காளப்பட்டி | இஸ்கான் கோவில் முதல் டெக்ஸ் பார்க் சாலை வரை தார் சாலை மேம்பாடு செய்தல் | 40.00 | 40.00 |
| 2 | | | இஸ்கான் கோவில் முதல் ஜி.ஆர்.ஜி நகர் வரை தடுப்புச் சுவர் கட்டுதல் | 26.00 | 26.00 |
| 3 | | | காளப்பட்டி – சித்ரா மெயின்ரோடு முதல் கொடீசியா வளாகம் பின்புறம் வரை தார் சாலை அமைத்தல் | 40.00 | 40.00 |
| 4 | | | சசி அவென்யூ முதல் என்.ஆர்.ஐ.நகர் வரை தார் சாலை அமைத்தல் | 26.00 | 26.00 |
| 5 | | | சேரன் மாநகர் முதல் மாநகராட்சி எல்லை வரை தார் சாலை அமைத்தல் | 26.00 | 26.00 |
| 6 | | | காளப்பட்டி – சித்ரா பிரதான சாலையில் (அவிநாசி மெயின்ரோடு முதல் நேருநகர் மேற்கு முதல் வீதி வரை) கழிவு நீர் கால்வாய் அமைத்தல் | 37.00 | 37.00 |
| 7 | | | சித்ரா பிரதான சாலையில் நேரு நகர் மேற்கு முதல் வீதியிலிருந்து வீரியம்பாளையம் ரோடு சந்திப்பு வரை அமைத்தல் கழிவுநீர் கால்வாயுடன் கூடிய மூடி அமைத்தல் | 25.00 | 25.00 |
| 8 | | | காளப்பட்டி – சித்ரா பிரதான சாலையில் (அவிநாசி மெயின்ரோடு முதல் நேருநகர் மேற்கு முதல் வீதி வரை) கழிவுநீர் கால்வாய் மேல்மூடி அமைத்தல் | 23.50 | 23.50 |
| 9 | | | காளப்பட்டி – சித்ரா பிரதான சாலையில் அவினாசி மெயின்ரோடு முதல் நேருநகர் மேற்கு முதல் வீதியிலிருந்து வீரியம்பாளையம் ரோடு சந்திப்பு வரை இருபுறமும் நடைபாதை அமைத்தல் | 31.50 | 31.50 |
| 10 | | | டெக்ஸ் பார்க் சாலை முதல் சேரன் மாநகர் வரை தெரு விளக்குகள் அமைத்தல் (55 விளக்குகள் மாற்றி அமைத்தல் மற்றும் 10 விளக்குகள் புதியதாக அமைத்தல்) | 6.00 | 6.00 |
| 11 | | | சித்ரா பிரதான சாலையில் (அவினாசி ரோடு முதல் நேருநகர் மேற்கு முதல் வீதி வரை) நீரூற்றுடன் கூடிய சாலை ஓர பூங்கா அமைத்தல் | 10.00 | 10.00 |
| 12 | | வெள்ளலூர் | மனத்தாக்குசாலை பெருமாள் கோவில் பிரிவு முதல் குளத்தேரி வரை தார்சாலை அமைத்தல் | 10.00 | 10.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13 | | | வெள்ளலூர் பேருந்து நிறுத்தம் அருகில் சாலை ஓரப்பூங்கா அமைத்தல் | 4.00 | 4.00 |
| 14 | | | வெள்ளலூர் வாரச்சந்தை வளாகத்தில் சிமெண்ட் தளம் மற்றும் வடிகால் அமைத்தல் | 8.00 | 8.00 |
| 15 | நீலகிரி | கீழ்குந்தா | முள்ளிமலை கண்டியில் தடுப்பு சுவர் மற்றும் நடை பாதை அமைத்தல் | 15.00 | 15.00 |
| 16 | | கேத்தி | பிரகாசபுரம் சுடுகாட்டு சாலை தார்சாலை அமைத்தல் | 5.00 | 5.00 |
| 17 | | | காந்தி நகர் வெள்ளி வியூ சாலை ரயில்வே பாலம் கீழ்பக்கம் தடுப்பு சுவர் வடிகால் மற்றும் சிமெண்ட் சாலை அமைத்தல் | 5.00 | 5.00 |
| 18 | | | காந்தி நகர் வெள்ளி வியூ சாலை முதல் அச்சன்கால் மெயின் சாலை வரை தடுப்பு சுவர் கட்டுதல் | 9.00 | 5.64 |
| 19 | | | காந்தி நகர் வெள்ளி வியூ சாலை வளைவு அருகில் தடுப்பு சுவர் கட்டுதல் | 6.00 | 6.00 |
| 20 | | | மந்தாடாவில் தடுப்பு சுவர் மற்றும் நடைபாதை அமைத்தல் | 6.00 | 6.00 |
| 21 | | | மந்தாடா கிருஷ்ணசாமி வீடு அருகில் தடுப்பு சுவர் மற்றும் நடைபாதை அமைத்தல் | 6.00 | 6.00 |
| 22 | | | கீழ் பாரதி நகரில் தடுப்பு சுவர் மற்றும் நடைபாதை அமைத்தல் | 5.00 | 5.00 |
| 23 | | | அளஞ்சியில் தடுப்பு சுவர் கட்டுதல். | 15.00 | 15.00 |
| **24** | | | தொரசாடாவில் தடுப்பு சுவர் மற்றும் நடைபாதை அமைத்தல் | 8.00 | 8.00 |
| **25** | | கோத்தகிரி | கோத்தகிரி பேருந்து நிலைய முன்புறம் தடுப்பு சுவர் மற்றும் நடைபாதை அமைத்தல் | 15.00 | 15.00 |
| **26** | | | அம்பேத்கார் நகரில் தடுப்பு சுவர் கட்டுதல் | 5.00 | 5.00 |
| **27** | | ஜெகதலா | கொசெட்டி அன்னை தெரேசா நகர் தடுப்பு சுவர் மற்றும் நடைபாதை அமைத்தல் | 5.00 | 5.00 |
| **28** | | | ஜெகதலா பேரூராட்சி அலுவலக பின்புறம் தடுப்பு சுவர் கட்டுதல் | 5.00 | 5.00 |
| | **மொத்தம்** | | | **423.00** | **419.64** |

**நிரஞ்சன் மார்டி**
**அரசு செயலாளர்.**

/ உண்மை நகல் /

பிரிவு அலுவலர்.